கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.129/2021

வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **மெய்யப்பன்** | தொழில் | |
| தகப்பனார் பெயர் | **பெத்தப்பெருமாள்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 25.10.2024 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

வா.சா.1.மெய்யப்பன் தரப்பில் முதல் விசாரணை பிரமாண நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

நான் வழக்கின் வாதி. என் தரப்பில் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரிதான். நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **வா.சா.ஆ.1.** | 08.09.2012 | **பிரதிவாதியும் அவரது தகப்பனாரும் எனக்கு எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரம் (மேற்படி ஆவணம் போதிய முத்திரை தாள் மீது எழுதப்படவில்லை என்றும் அது பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும் அதனால் அதனை குறியீடு செய்ய முடியாது என்றும், பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் கூட கடனை நிருபிப்பதற்காக மேற்படி ஆவணம் குறியீடு செய்யலாம் என்று மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் 2008 (5)CTC 206 என்ற முன்தீர்பை முன்வைத்து வாதிட்டார். எனவே, மேற்படி முன்தீர்பின் அடிப்படையில் மேற்படி ஆவணத்தின் ஏற்புதன்மை குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் என்று ஆட்சேபனைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்டுகிறது)** | **அசல்** |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.2. | 25.01.1984 | பிரதிவாதியின் தயார் பெயரில் உள்ள கிரைய பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.3. | 02.11.2020 | நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | உண்மை நகல் |
| வா.சா.ஆ.4. | 05.01.2021 | 01.01.2010 முதல் 04.01.2021 வரைக்கான வில்லங்கச்சான்றிதழ் | வளைதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| வா.சா.ஆ.5. | 20.10.2013 | பிரதிவாதியின் தகப்பனார் பரமசிவத்தில் இறப்பு சான்றிதழ் | அசல் |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.10.25 19:33:17 +0530

Additional District Judge,

Dindigul.